**அ.வ.எண். 65/2019**

நாள். 03.07.2025

பெயர் சாமுண்டீஸ்வரி க/பெ கருணாகரன்

வாதி தரப்பு 1-ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை (தொடர்ச்சி)**

1) தாவா சொத்து முழுவதும் வண்டிபாதையாக தான் நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான், அது என் பெயரில் உள்ளது. என் பெயரில் உள்ளதற்கான பட்டா, சிட்டா, அடங்கல் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அதுபோல் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா வண்டிபாதை அகலம் 22 அடி நீளம் எவ்வளவு என்று எனக்கு தெரியவில்லை. தாவா வண்டிபாதை நிலத்தின் மேற்கு, வடக்கு, தெற்கில் எனக்கு எந்த நிலமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து அரை கிலோமீட்டர் தூரத்தில் தான் நான் குடியிருக்கும் நிலம், விவசாய நிலம் உள்ளது என்றால் சரிதான்.

2) தாவா புல எண்ணில் வண்டிபாதையை காண்பித்து தான் நான் மற்ற நபர்களுக்கு வீட்டுமனையாக கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 15 பத்திரத்தில் அடிமனை எனக்கு மட்டும் தான் பாத்தியம் என்றும், மற்றவர்களுக்கு போக்குவரத்து தான் வண்டிபாதையை பாத்தியமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றும், அதனால் தான் நான் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் என் வக்கீலுக்கு தான் தெரியும்.

3) தாவா நடைமுறையில் இருக்கும்போதும் பூரண விசாணைக்கு பிறகு 2 முதல் 4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு அவருக்கு பாத்தியப்பட்ட இதர நிலங்களில் உள்ள வீட்டு மனைகளுக்கு அப்ரூவல் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், முழுமையான விசாரணைக்கு பிறகு தான் அப்ரூவல் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் கேஷ் கொடுத்த பிறகு தான் வழக்கிற்கு முன்பாக அப்ரூவல் வாங்கியுள்ளதாக தெரியவந்தது.

4) வண்டிவழிப்பாதையில் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லாததால் தான் 2 முதல் 4 பிரதிவாதிகள் அப்ரூவல் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு தாவா வண்டிப்பாதையில் பாத்தியம் இல்லாததால் தான் அவர்கள் என் பாத்தியத்தை மறுத்து அப்ரூவல் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. தாவா வண்டிப்பாதை என் பாத்தியத்தை விளம்புகை செய்யவும், ஏற்கனவே அப்ரூவல் கொடுக்கப்பட்டது சட்டத்திற்கு புறம்பானது என என் தாவாவில் எவ்வித திருத்தப்பாடும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

5) நான் 15 நபர்களிடம் தாவா சொத்தை கிரையம் கொடுத்துள்ளேன் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 15 நபர்கள் முதல் பிரதிவாதிக்கு ஆதரவாக அப்ரூவலுக்கு ஆட்சேபனை செய்துள்ளார்களா என்றால் இல்லை. பஞ்சாயத்திற்கு

உட்பட்டு இரண்டு புறமும் இடம் கொடுத்து மின்சார வசதிக்காகவும், குடிநீர் வசதிக்காகவும் இடம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அனுமதியுடன் தான் இடம் விடப்பட்டது.

6) நான் பஞ்சாயத்திற்கு பைப் லைன், மின்சார வசதி அனுமதி கொடுத்தேன் என்பதற்கு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பஞ்சாயத்திடம் வாய்மொழியாக தான் ஒப்புக்கொண்டேன். சர்வே எண்.58/1ஏ, மற்றும் 60/3 ஆகிய நிலங்கள் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் வண்டிப்பாதைக்கு மேற்கில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, வடக்கில் உள்ளது. மேற்படி நிலங்களை அப்ரூவல் செய்து வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) நான் தாக்கல் செய்துள்ள தாவா வழக்கு உறுத்துகட்டளைக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றும், தாவா பரிகாரம் கோரி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதிக்கு அப்ரூவல் முன்தேதியிட்டு கொடுத்துள்ளதற்காக நான் தாவாவில் திருத்தப்பாடு ஏதாவது செய்துள்ளேனா என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்படாத சொத்திலும், அனுபவத்தில் இல்லாத சொத்திலும் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வீட்டுமனைகளாக விற்று பணம் சம்பாதித்துவிடுவார் என்கிற கெட்ட எண்ணத்தில் நான் அவர் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரில் எந்த பரிகா ரத்தையும் கோர எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. எனக்கு நன்கு தெரிந்து எனக்கு பாத்தியப்படாத சொத்தின் பேரில் வழக்குதாக்கல் செய்துள்ளதால் 1ம் பிரதிவாதிக்கு நான் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- Sri Mathura.S. LL.M.,
District Munsif,
Harur.